வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.08.2025 திங்கட்கிழமை இதழ் : 237 பக்கங்கள் : 12

# அர்ப்பணிப்புடன் செயலாற்றி ரணிலை பாதுகாப்போம்!

## எதிர்க்கட்சிகள் கூடி பிரதிக்ஞை

கொழும்பு, ஓகஸ்ட் 25

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என்று சகல எதிர்க்கட்சிகளும் கூடி பிரதிக்ஞை செய்துள்ளன.**



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து "அரசமைப்பு சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம்" என்ற தொனிப்பொருளில் நேற்று கொழும்பில் ஒன்றுகூடி செய்தியாளர் சந்திப்பை நடத்தின.

இதன்போது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்படுகிறது. இன்று ரணிலுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். (11)

# அரியாலை புதைகுழி அகழ்வு இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 25

அரியாலை மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இரு கட்டங்களாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக தற்போது முன்னெடுக்கப்படும் அகழ்வு பணி 45 நாட்கள் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதில், கடந்த 6ஆம் திகதி வரை இரு பகுதிகளாக 32 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில், மூன்றாவது பகுதி அகழ்வுப் பணி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வு (11)

# தயவுசெய்து ரணிலை உடன் விடுதலை செய்க

## எரிக் சொல்ஹெய்ம் கோரிக்கை

கொழும்பு, ஒக. 25



ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுதியற்றவை. தயவு செய்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் - என்று நோர்வேயின் இலங்கையில் சமாதானத்துக்கான (11)

# இராணுவ முகாம்களை அகற்றுமாறு பருத்தித்துறையில் இன்று போராட்டம்

வடமராட்சி, ஒக. 25

பருத்தித்துறை நகரிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை மக்கள் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

"பருத்தித்துறை நகரை பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் இன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் ஆரம்பமாகும் மக்கள் பேரணி பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்று கோரிக்கை மனு வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை துறைமுகம், வெளிச்சவீடு பகுதிகளில் அமைந்துள்ள படை (11)

# கூரையிலிருந்து தவறி விழுந்து இளைஞர் பலி!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக. 25

வீட்டின் கூரையிலிருந்து தவறி விழுந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த சந்திரசேகரம் பிரணவன் என்ற (11)

# தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தம் நிறைவு

கொழும்பு, ஒக. 25

தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடனான கலந்துரையாடலில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைவாக கடந்த 7 நாட்களாக முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நிறைவுக்கு (11)

# வடக்கு அரசியல்வாதிகளின் வாழ்விலும் வசந்தம் பிறக்கும்

## அமைச்சர் சந்திரசேகர்

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக. 25

"ஒரு சில வாரங்களில் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் வசந்தம் பிறக்கும் என நினைக்கிறோம்" - என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "வடக்கு, கிழக்கில் உள்ள தேவையற்ற இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்களின் (11)

# ஒன்றுசேர்ந்துள்ள குப்பைகளால் எமது அரசை அசைக்க முடியாது!

## வவுனியாவில் அமைச்சர் பிமல்

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக. 25

தற்போது ஒன்று சேர்ந்துள்ள குப்பைகளால் எமது அரசை எதுவும் செய்துவிட முடியாது - இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவின் கைது (11)

# மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஒக. 25

நாடு முழுவதும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மருத்துவர்களின் இடமாற்ற செயல்முறை தொடர்பான பிரச்னைகள் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுமந்திரனின் கவலை எமக்கு கவலை தருகிறது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

யாழ்ப்பாணம், ஒக. 25

ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமை தவறு என்று சுமந்திரன் கூறுவது கவலை அளிக்கிறது. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கதைக்கிறாரா அல்லது ரணிலின் வீட்டில் இருந்து கதைக்கிறாரா என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "கறுப்பு ஜூலை கலவரம், நூலக (11)

# ரணில் தீவிர சிகிச்சை கண்காணிப்பில் உள்ளார்!

## தேசிய மருத்துவமனை பிரதி பணிப்பாளர்

கொழும்பு, ஒக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதயம், சிறுநீரக பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால், அவர் மருத்துவ நிபுணர்களால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறார். இரண்டு அல்லது மூன்று நாட்களில் அவர் குணமடைவார் என்று நாங்கள் நம்புகிறோம் - என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார். (11)

# தமது படகுகளை பார்வையிட யாழ். வரும் தமிழக மீனவர்கள்




யாழ்ப்பாணம், ஒக. 25

நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை பார்வையிடுவதற்காக 14 தமிழக மீனவர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

தனியான படகில் இன்றைய தினம் வரும் தமிழக மீனவர்களை நடுக்கடலிலிருந்து கடற்படையினர் யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கு (11)

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கல்யாண திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றவேளை...! (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு சர்வதேச விசாரணையே வேண்டும்!

### கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி சபைகள் தீர்மானம்

கிளிநொச்சி, ஓக. 25

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணை நீதியை பெற்றுத்தராது. எனவே, சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சியான சமத்துவக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

சிறுபான்மை இனமான தமிழ் இனம் மீது இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் 2009 வரை மேற்கொண்டது ஒரு இனவழிப்பு நடவடிக்கையே எனவும். அதன் உச்சக்கட்டமாக 2009 இறுதி யுத்தகாலத்தில் மிக கொடூரமான இனவழிப்பு யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

அத்துடன், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள், தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான வடக்கு கிழக்கில் பல இடங்களில் பாரிய மனித புதைகுழிகள் காணப்படுகின்றன. அதன் ஒரு பெரும் சாட்சியாக செம்மணி மனித புதைக்குழி உள்ளது.

எனவேதான், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணைகள் நீதியை பெற்றுதராது ஆகவே சர்வதேச சமூகம் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை என்பன ஒரு சர்வதேச விசாரணை பொறிமுறையை உருவாக்கி தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் - என்றுள்ளன. (ஐ)

# சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பின் பரிசளிப்பு, ஆண்டு விழா




யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று முன்தினம் அந்த அமைப்பின் இணைத்தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலருமான இ. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பண்பாட்டு கலைக்கூடலின் மாணவர்களால் பண்ணிசை, கோலாட்டம் என்பன நடத்தப்பட்டன.

தொடர்ந்து, யாழ்ப்பாணம், வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அத்துடன், முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனின் "பொழிலும் பொலிவும்" நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா. சுதர்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-03)

# 2 கிராம் ஹெரோயினுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 25

ஹெரோயின் போதைப் பொருளுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் 2 கிராம் ஹெரோயினை காரில் வைத்திருந்தவேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## ஹன்ரர் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஓக. 25

சைக்கிளில் சென்றவரை ஹன்ரர் வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - கனகராயன் குளம் - கொல்லர்புளியங்குளம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இதில், முத்து இராமலிங்கம் (வயது 61) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்ற ஹன்ரர் வாகனமே சைக்கிளில் சென்றவரை மோதியது.

இதில், படுகாயமடைந்தவரை மாங்குளம் மருத்துவ மனையில் சேர்த்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

### விபத்தில் முதியவர் மரணம்

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 25

விபத்தில் உயிரிழந்த முதிய வரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு தெல்லிப் பழை பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் தவ ளைகிரி - முத்துமாரி அம் மன் ஆலயம் அருகே கடந்த நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

பட்டா வாகனத்தை பின்பக்கமாக செலுத்திய போது முதியவர் அதில் சிக்கி உயிரிழந்தார் என்று அந்த வாகனத்தை செலுத்திய சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

விபத்தையடுத்து, அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். உயிரிழந்தவருக்கு 65 - 70 வயது இருக்கலாம்



என்று தெரிவித்த பொலிஸார், சடலம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (ஐ-05)

# வேலை நிறுத்தங்கள் மூலமாக சுகாதார அமைப்பு சீர்குலைவு

### சுகாதார அமைச்சர் நளிந்த

கொழும்பு, ஓக. 25

சுகாதார சேவையில் மனித வள மேம்பாட்டில் அனைத்து ஊழியர்களிடையேயும் ஒற்றுமை, தொழில்முறையை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகுஜன வேலைநிறுத்தங்கள் மூலம் சுகாதார அமைப்புகள் சீர்குலைந்து வருகின்றன என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

காலியில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக திறைசேரியிலிருந்து பல நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும் மனித வள மேம்பாட்டில் சுகாதாரத் துறையில் உள்ள அனைவருக்கும் இடையே ஒற்றுமை மற்றும் தொழில்முறை ஆகிய இரண்டு முக்கிய காரணிகளை வலுப்படுத்த நம்புகிறோம்.

தொழிற்சங்கங்கள் நடத்தும் வேலைநிறுத்தங்கள் மூலம் அமைப்புகள் சீர்குலைக்கப்படுகின்றன. ஊழியர்களின் தொழில்முறைத் திறனை அதிகரிக்க அரசாங்கம் தொடர்ந்து பாடுபடுகிறது.

நாட்டில் சுகாதார சேவை ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்த சவால்களை மிகச் சிறப்பாகச் சமாளித்துள்ளோம். சுகாதார சேவையின் பல்வேறு துறைகள் குறித்து நேரடியாகவும் பெருமையாகவும் பேச முடிந்தாலும், வயதான மக்கள் தொகை, தொற்றா நோய்கள், மனநலம், ஊட்டச்சத்து போன்ற எதிர்கால சவால்களை அடையாளம் காண்பது மிகவும் முக்கியம். இதற்கு அனைத்து சுகாதார நிபுணர்களின் ஆதரவையும் பெற விரும்புகிறோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.08.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒரு தமிழ் நோய்

பேரழிவுகளை சந்திக்கும்போதுதான் ஒரு சமூகம் நிதானமாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். நிதானத்தை இழந்துவிட்டால் அனைத்தும் சர்வநாசமாகிவிடும். இது எவருக்கெல்லாம் பொருந்தும் என்பதைச் சொல்ல முடியாவிட்டாலும்கூட, ஈழத் தமிழ் சமூகத்துக்கு மிகவும் அச்சொட்டாகப் பொருந்தி வருகிறது. நாம் பொதுவாக அரசியல்வாதிகளின் ஒன்றுமையின்மை பற்றியே அதிகம் பேசுவது உண்டு. ஆனால், சமூகத்தின் அனைத்து மட்டாங்களிலும் ஒற்றுமையின்மை என்னும் நோய் ஆழமாகப் பரவிக்கிடக்கிறது. அது சமூகத்தை கொஞ்சம் கொஞ்சமாக முடமாக்கிக் கொண்டிருக்கிறது.

இடுப்புக்கு கீழ் இயங்க முடியாத விடுதலைப் புலிகளின் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கான அமைப்பு ஒன்றுக்குள் இடம்பெறும் சண்டைகள் 'ஈழநாடு' ஆசிரியர்பீடத்தின் கவனத்துக்கு வந்திருந்தது. 2009இற்கு பின்னரான சமூகச் சூழலில் எந்தளவுக்கு ஒற்றுமையின்மையும் பதவிப் போட்டிகளும் சமூகத்தை சீரழிகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

இடுப்புக்குக் கீழ் இயங்க முடியாதவர்களே பதவிப் போட்டிக்காக சண்டையிடும்போது பாராளுமன்ற கதிரைகளை இலக்கு வைத்திருக்கும் அரசியல்வாதிகள் எந்தளவுக்கு சண்டையிடுவார்கள் - ஒருவரையொருவர் வீழ்த்துவதற்கு சூழ்ச்சிகள் புரிவார்கள் என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியுமல்லவா!

இதேபோன்றுதான், வடக்கு, கிழக்கில் எவரேனும் நல்ல அபிவிருத்தித் திட்டங்களை மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை மேற்கொள்ள முயற்சிக்கும்போது அதனைக் குழப்புவதற்கு தமிழ் சமூகத்திலிருந்தே சதிகள் புரியப்படுகின்றன. பொதுவாக, அனைத்துக் குழப்பங்களுக்கு பின்னாலும் யாரோ ஓர் எதிரி இருப்பதான கதை புனையப்பட்டாலும்கூட உண்மையோ, அதிகமான குழப்பங்கள் சொந்த சமூகத்திலிருந்துதான் வருகின்றன. அவ்வாறான தகவல்களும் ஈழநாட்டின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சமூகமட்ட அமைப்புகள், சிவில் சமூகக் குழுக்களிலிருந்து அரசியல் கட்சிகள் வரையில் அனைத்து மட்டங்களிலும் ஒற்றுமையின்மையும் பதவிப் பேராசையும் தலைவிரித்தாடுகின்றன. 2009 இற்கு முன்னரும் தமிழ் சமூகம் ஒன்றுமையுடன் இருந்தது என்று கூறமுடியாவிட்டாலும்கூட, ஒப்பீட்டு அடிப்படையில் இந்தளவுக்கு நிலைமை மோசமாக இருந்திருக்கவில்லை. தோழமையும் பரிவுணர்வும் விட்டுக்கொடுப்பும் இருந்தன. ஆனால், 2009இற்கு பின்னரான அரசியல் மற்றும் சமூகச் சூழலில் சுயநலமும் குழிபறிப்புகளும் ஈழத் தமிழ் சமூகத்தை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, போர் அழிவுகளுக்கு பின்னரான சூழல் மிகவும் சீரழிந்து கிடக்கிறது. உதாரணமாக யுத்தம் முடிவுற்றபோது, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக ஓர் அமைப்பு இருந்தது. ஆனால், இப்போது அது பல அமைப்புகளாக உடைவுற்றிருக்கிறது. இந்த விடயங்களை ஆராய்ந்து பார்த்தால் அதற்கு பின்னால் அதிகம் புலம்பெயர் நிதி இருப்பதை அவதானிக்க முடிகிறது. புலம்பெயர் சூழலிலிருந்து வரும் பணமே அதிகமான குழப்பங்களுக்கு காரணமாக இருக்கிறது. பணத்தைத் தாங்களே பெற வேண்டும் என்பதற்காகவே புதிய அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

# தமிழ்ச் சமூகம் இழந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர் விமலராஜா

**வீரகத்தி தனபாலசிங்கம்**



இலங்கையில் குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர்களில் ஒருவரான வேலாயுதம் விமலராஜா மறைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதியான அவர் கடந்த ஜூன் மாதம் 12 திகதி தனது 90 வது வயதை அடையவிருந்த நிலையில் சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் ( 12 மே 2025 ) அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

எனது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்தவரான விமலராஜாவுடன் இளவயதில் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அவர் என்னை விடவும் வயதில் மிகவும் மூத்தவர். நாங்கள் வளர் இளம் பருவத்தினராக இருந்த நாட்களில் விமலராஜா கரவை வெல்லன் விநாயகர் கோவில் திருவிழாக்களுக்கு வந்ததை நான் கண்டிருக்கிறேன்.

கொழும்பில்தான் அவருடன் ஊடாடக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் ஒரு பத்திரிகையாளனாக இருப்பது அவருடன் நெருக்கமாக பழகுவதற்கான வாய்ப்பை அதிகரித்தது.. விமலராஜாவின் தந்தையார் கே. வேலாயுதம் அவர்கள் எமது ஊரில் பிரபல்யமான ஓர் ஆங்கில ஆசிரியர்.

அவுஸ்திரேலியாவுக்கு விமலராஜா குடும்பத்துடன் புலம்பெயரும் வரை நாமிருவரும் நெருக்கமான தொடர்பைப் பேணினோம். அவரின் குடும்பத்தவர்களும் கூட எனக்கு பழக்கமானவர்களே. கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக என்னுடன் அவர் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீண்ட நேரம் பலதும் பத்தும் பேசுவார். பழைய அனுபவங்களையும் மீட்பார். அவரது மனைவி இரு வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் காலமானபோது விமலராஜாவுடன் தொடர்பு கொண்டு அனுதாபத்தை தெரிவித்து ஆறுதல் கூற முடியாத அளவுக்கு அவர் சுகவீனமுற்றிருந்தார் என்பது துரதிர்ஷ்டவசமானது.

கரவெட்டி கிராமத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டவரான விமலராஜா விக்னேஸ்வரா கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர். அந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்பு புக்கிளையின் தலைவராக பல வருடங்கள் பணியாற்றிய அவர் நான் அந்த கல்லூரியில் கல்வி கற்காதவன் என்ற போதிலும், பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் பங்கேற்குமாறு அழைப்பார். "நீ அங்கு கல்வி கற்காவிட்டாலும், எந்தவொரு கரவெட்டியானும் விக்னேஸ்வராவுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் இருக்க முடியாது" என்று நகைச்சுவையாக அவர் கூறுவார். அவர் யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலும் கல்வி கற்றவர்.

நாமெல்லோரும் என்றென்றைக்கும் பெருமைப்படக்கூடியதாக தொழில் சட்டத்துறையில் சிறந்து விளங்கிய விமலராஜா கைத்தொழில் மற்றும் தொழில் சட்டவாதிகள் மத்தியில் மிகுந்த அறிவார்ந்தவர்களில் ஒருவராக விளங்கினார். தொழில் சட்டங்களில் ஆழமான ஆய்வுகளைச் செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் கொழும்பில் தொழில் திணைக்களத்தில் இருபது வருடங்களாக பணியாற்றியபோது நாட்டின் பல பாகங்களிலும் நீதிமன்றங்களில் கைத்தொழில் உறவுகளுடன் கூடிய முக்கியமான வழக்குகள் பலவற்றைக் கையாண்டார். தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் அதிகாரி என்ற வகையில் தொழில் முகாமைத்துவ மகாநாடுகள் பலவற்றுக்கு விமலராஜா தலைமை தாங்கியதுடன் நீண்டகாலமாக இழுபறிப்பட்ட தொழில் பிணக்குகள் பலவற்றுக்கு தீர்வையும் கண்டார். அதற்காக தொழில் திணைக்களத்தில் அவருக்கு தனித்துவமான ஒரு மதிப்பு இருந்தது.

சட்டக்கல்லூரியில் படித்து சட்டத்தரணியாக வெளியேறியதும் 1978 ஆம் ஆண்டில் தொழில் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்ற விமலராஜா கொழும்பிலும் நீர்கொழும்பிலும் பணியாற்றினார். வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் பிரபலமான சட்டத்தரணிகள் முன்னிலையான சிக்கலான வழக்குகள் பலவற்றை திறமையாக கையாண்ட விமலராஜாவின் பல தீர்ப்புக்களை மேல் நிலை நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தின.

1991 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அவர் அதற்கு பிறகு தொழில் பிணக்குகள் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் முதல்நிலை நீதிமன்றங்களிலும் மேல்நிலை நீதிமன்றங்களிலும் சட்டத்தரணியாக முன்னிலையானார். கைத்தொழில் நீதிமன்ற நடுவர்கள் சங்கத்தின் தலைவராக ஆறு வருடங்கள் பதவி வகித்த விமலராஜா 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில் சட்ட நிறுவனத்தின் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றினார். தொழில் சட்டங்கள் பற்றி அவர் எழுதிய பல்வேறு நூல்கள் அந்த துறை சார்ந்தவர்களுக்கு பெரிதும் பயனுடையவையாக இருக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பிறகு அவர் இலங்கைக்கு வரமுடியாமல் போய்விட்டது. அவரின் மறைவு என்னைப் பொறுத்தவரை, என்னைப் புரிந்து கொண்டு நெருக்கமாகப் பழகியதுடன் பல்வேறு வழிகளிலும் உதவியாக இருந்த ஒரு நல்லுள்ளத்தின் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**இடபம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும் அழகும் இளமையும் கூடும் இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். தடைகள் உடைபடும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள்.

**கன்னி**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**துலாம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்மறை சிந்தனைகள் பிறக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். குடும்பத்தில் யாரும் தன்னைப் புரிந்துக்கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**கும்பம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு.

**மீனம்**
வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

# இன்று சைவத்துக்கும் தமிழுக்கும் உள்ளக, வெளியக அழுத்தங்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்



*யாழ்ப்பாணம், ஒக. 25*

இன்று சைவத்துக்கும் தமிழுக்கும் பல தரப்புக்களாலும் உள்ளக, வெளியக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அந்த அழுத்தங்களிலிருந்து சைவத்தையும் தமிழையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

எந்தவொரு விடயம் அழிக்கப்படுகின்றதோ? அல்லது கால ஓட்டத்தில் மறைந்து செல்கின்றதோ? அதைத்தக்க வைப்பதற்கும் அடுத்த சந்ததிக்கு ஒப்படைப்பதற்காகவும் தான் தினங்கள், அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதைப்போலத்தான் நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பையும் நான் பார்க்கின்றேன். காலத்துக்குத் தேவையான அமைப்பு, பொருத்தமான இடத்திலிருந்து பொருத்தமானவர்களால் தொடக்கப்பட்டு நடைபோடுகின்றது என்றும் ஆளுநர் கூறினார்.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் மேலும் கூறுகையில்,

"ஆன்மீகத்தில் ஈடுபாடு குறைந்து செல்வது மாத்திரமல்லாது ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது கூட குறைந்துள்ளது.

ஆன்மீகம் வாழ்வியலுக்குத் தேவை. நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடம் செய்துள்ள பணி பாராட்டுக்குரியது. 5 ஆண்டுக ளாக அவர்கள் இதைச் செய்து வருகின்றார்கள். இளம் பிள்ளை களை இதில் அதிகளவு ஈடுபடுத்தி ஊக்கப்படுத் தியிருக்கின்றார்கள். கலாநிதி ஆறு. திருமுருகன் தனது உரையில் குறிப்பிட்டதைப்போல மணல் தொடர்பான தீர்மானங்கள் வருத்தத்துக்குரியன. யாழ்ப் பாணத்தின் அடையாளமாக நல்லூர் கந்தசுவாமி கோவிலே உலகம் எங்கும் விளங்குகிறது. நாங்கள் யாழ்ப்பாண மண்ணிலே பிறந்தோம் என்று பெருமை கொள்ளுவதற்கும் அந்த நல்லூரே காரணமாக இருக்கின்றது". - என்றார்.

# நல்லூருக்கு மணல் வழங்க மறுப்பு ஓர் அபசகுணமான செயல்பாடு

## கலாநிதி ஆறு.திருமுருகன் வருத்தம்



*யாழ்ப்பாணம், ஒக. 25*

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கின்றது. ஆலயச் சூழலுக்கு மணல் பெற்றுக்கொள்வதை சிலர் தடுத்திருக்கின்றார்கள். வேதனையான விடயம். எதிர்காலத்தில் மணல் வழங்கமாட்டோம் என்று பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. நல்லூரானுக்கு மணல் வழங்காமல் இருப்பதற்கு தமிழ் மண்ணிலுள்ள தமிழர்களின் பிரதேச சபை தீர்மானித்திருக்கின்றது. இது ஓர் அபசகுண மான செயல்பாடு. எல்லாவற்றையும் நல்லூரான் பார்த்துக் கொள்வான் என்று தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர், கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று முன்தினம் நடைபெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# வளத்தை அழிக்காதே! வவுனியாவில் 'கருநிலம்' கவனவீர்ப்பு போராட்டம்






*வவுனியா, ஒக. 25*

மன்னாரில் மேற்கொள்ளப்படும் கனியவள அகழ்வுக்கு எதிராக வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்புடன் கருநிலம் என்னும் தொனிப்பொருளில் கவன வீர்ப்பு போராட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் பறை முழங்கி மக்களுக்கு போராட்டத்தின் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் "இந்த மண் எங்களின் உரிமை", "எங்கள் எதிர்காலத்திற்கான வளத்தை அழிக்காதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி வழியாக கடை வீதியூடாக சென்று கொறவப்பொத்தான வீதியில் சென்று தமது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்ட இளைஞர்கள், மன்னார் மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ. மயூரன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ. எம். பி. பணிமனை பிரதிநிதிகள் சோமரத்னவை சிறையில் சந்தித்தனர்!

கொழும்பு, ஓக. 25

**கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை கடந்த வாரம் சிறைச்சாலையில் சந்தித்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் (ஓ. எம். பி.) பிரதிநிதிகள், அவர் வெளிப்படுத்தவிருப்பதாக அறிவித்த விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.**

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்துத் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டுமொரு சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி. விஜேவிக்ரம கடந்த ஜுலை மாதம் 10 ஆம் திகதியிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

7ஆம் இராணுவக் காலாட்படை தலைமையகத்தில் கொல்லப்பட்டு, செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

இக்கடிதம் பற்றிய செய்தி வெளியானதை அடுத்து, தாம் சோமரத்ன ராஜபக்ஷவை சந்தித்து மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக காணாமல் போனோர் பற்றிய பணிமனை தெரிவித்திருந்தது. இந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலையில் சந்தித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் மூவர், அவரிடம் விடயங்களைக் கேட்டறிந்தனர்.


இதன்போது கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் படுகொலையில் தனது வகிபாகம், 1996ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் "தலையாட்டிகள்" மூலம் நபர்கள் அடையாளம் காட்டப்பட்டு கைது செய்தமை உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் சுமார் ஒருமணி நேரத்துக்கும் மேல் விபரித்தார்.

சோமரத்ன ராஜபக்ஷவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கவிருக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய பணிமனை வெகுவிரைவில் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

# ஊடகவியலாளர்களுக்கென 2026இல் காப்பீட்டுத் திட்டம்!

## அமைச்சர் நளிந்த அறிவிப்பு



கொழும்பு, ஓக. 25

ஊடகவியலாளர்களுக்கென காப்பீட்டுத் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்று சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அசி திசி ஊடகவியல் புலமைப்பரிசில் திட்டத்தின் 2025 புலமைப்பரிசில் விருது வழங்கும் விழாவில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர்கள் ஊடக துறையில் தங்கள் தொழில் சார் திறன்களை வளர்த்துக் கொள்ள அரசாங்கம் வாய்ப்புகளை வழங்கி வருகிறது. புதிய ஊடகக் கொள்கையைத் தயாரித்தல், பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைக் கோவையைத் தயாரித்தல் மற்றும் பத்திரிகையாளர்களுக்கான நிறுவனத்தைத் தொடங்குதல் போன்ற பல திட்டங்களை வெகுஜன ஊடக அமைச்சு ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது.

ஊடகத் துறை ஒரு சமூகத்தின் நான்கு முக்கிய தூண்களில் ஒன்றாகும். மற்ற மூன்றும் நீதித்துறை, சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறைகள்.

அரசியல் துறை என்பது ஆய்வு செய்யப்பட்டு பயிற்சி பெற வேண்டிய ஒரு துறை என்றும், பொதுமக்களின் ஒப்புதலுடன் அரசியல் துறையில் நுழைந்த பிறகு, ஒருவர் தனது திறன்கள், திறமைகள் மற்றும் நிபுணத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது பத்திரிகைத் துறைக்கும் பொருந்தும்.

பத்திரிகையாளர்கள் பங்களித்தால், அரசாங்கம் எதிர்பார்த்தபடி முன்னேற முடியும். வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி படிப்புகள், பட்டங்கள் மற்றும் அனுபவ பரிமாற்றத் திட்டங்களில் உள்ளூர் பத்திரிகையாளர்களை ஈடுபடுத்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் விரைவில் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். அடுத்த ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்க எதிர்பார்க்கிறோம் - என்றார்.

(ஐ)

# பொலிஸ் துறையில் விரைவில் புதிய விசாரணை பிரிவு ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 25

குற்றச் செயல்பாடுகள் ஊடாக பெறப்பட்ட சொத்துகள் குறித்து விசாரிக்க பொலிஸ் துறையில் புதிய விசாரணை பிரிவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மேல் மாகாண வடக்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஷாந்த சொய்சா தெரிவித்துள் ளார்.

நேற்று நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட, குற்றத்திலிருந்து பெறப்பட்ட சொத்துகள் தொடர்பான சட்டத்தின்படி இந்த விசாரணை பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இந்த விசாரணை பிரிவு, குற்றத்திலிருந்து ஈட் டப்பட்ட சொத்து விசாரணை பிரிவு (பி. சி. ஐ. டி.) என பெயரிடப்பட்டுள்ளது.

விரைவில் தொடங்கப்படவுள்ள புதிய விசாரணைப் பிரிவு, பொலிஸ் மா அதிபர் - மக்கள் சந்திப்பு தினத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# "மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது"

கொழும்பு, ஓக. 25

கடந்த அரசாங்கத்தில் முறையான விலைமனுக் கோரல் முறைமைக்கு வெளியே மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டதால் நாட்டில் தற்போது சில மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில் ,

கடந்த ஆண்டு விலைமனுக்கோரல் இல்லாததன் விளைவாகவே சில மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விலைமனுக்கோரல் விடப்பட்டிருந்தால், மருந் துகள் சரியாக வந்திருக்கும். அடுத்த ஆண்டுக்கு விலைமனுக்கோரல் விட்டுள்ளோம்.

தற்போதைய மருந்து பற்றாக்குறையை சமாளிக்க, பிராந்திய கொள்முதல்களுக்காக மருத்துவமனைகளுக்கு ரூ. 350 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளோம்.

இரண்டாவது, அவ்வப்போது சில நாடுகளுடன் பேச்சு நடத்தி, மருந்துகளை நன்கொடையாக பெறுகிறோம்.

சில நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் நிலையை அடைந்துவிட்டோம்.

எனவே இந்தப் பிரச்னையை நாம் எதிர்கொள்ள முடியும்." என்று கூறியுள்ளார். (ஐ)

# சமன் ஏகநாயக்கமீதும் விசாரணை தொடர்கிறது!



கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்துக்கான நிதியை அங்கீகரித்தமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்கவுக்கு எதிராக தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸ் தலைமையக சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும் விசாரணைகள் தொடர்ந்தும் நடக்கின்றன. இதனால், சமன் ஏக்கநாயக்க கைது செய்யப்பட்டுவாரா என்பது குறித்து இன்னும் எதுவும் கூற முடியாது.

இதேவேளை, "முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் தவறான வழியில் நடந்து கொண்டார்.

அரச அதிகாரிகள் அரசியல்வாதிகளை சரியான திசையில் வழிநடத்த வேண்டும். அவர்கள் தமது சொந்த நோக்கங்களுக்காக அரசாங்க நிதியைப் பயன்படுத்த முடியாது", என்றும் மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸூம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். அத்துடன், இந்தப் பயணத்துக்கான செலவுகளுக்கு முன் ஒப்புதல் பெறப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# கொழும்பு துப்பாக்கிச்சூட்டுக்கு பயன்படுத்திய ஓட்டோ சிக்கியது!

கொழும்பு, ஓக. 25

கொழும்பு - பொரலஸ்கமுவ பகுதியில் நேற்று நள்ளிரவு நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பிலியந்தலை, போகுந்தர பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் குறித்த முச்சக்கர வண்டி மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த முச்சக்கர வண்டிக்குள் இருந்து இரண்டு கருப்பு தலைக்கவசங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த முச்சக்கரவண்டி திருடப்பட்டதாக இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

(ஐ)

# அமெரிக்க வரி விதிப்பால் ஊதியம் குறையும் நிலை!

## புதிய ஆய்வில் தகவல்

கொழும்பு, ஓக. 25

அமெரிக்க வரி விதிப்பால் ஏற்படும் பணி நீக்கங்கள் காரணமாக நாட்டில் குறைந்த வேதனத்துடனான உழைப்பு உருவாகக்கூடும் என்று புதிய ஆய்வொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வரி விதிப்பால், தைக்கப்பட்ட ஆடைத்துறையை சேர்ந்த 16 ஆயிரம் பணியாளர்கள் தொழில்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாயம் மற்றும் ஏனைய பல தொழில் துறைகளுக்கான மலிவான கொடுப்பனவுகளை உருவாக்கும் வாய்ப்பு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயிற்றப்படாத தொழிலாளர்களால் முன்னெடுக்கப்படும் ஏனைய துறைகளும் பாதிப்படையலாம். இதன்படி, தைக்கப்பட்ட ஆடைத்துறையில் 15 ஆயிரத்து 850இற்கும் மேற்பட்ட பணிகளில் அனுபவமற்ற பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,500 மருத்துவர்கள் வெளியேறும் நிலை!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 25

**2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இது, நாட்டின் சுகாதார துறையில் கடுமையான நெருக்கடி ஏற்படுத்தும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட அதன் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகததாச,

"பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து வெளியேறுவது மருத்துவமனைகளை கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

"சுகாதார அமைச்சின் "குறுகிய பார்வை மற்றும் திறமையற்ற கொள்கைகள்" நிலைமையை மோசமாக்குகின்றன. பொருளாதார நீதி, நியாயமான சிகிச்சை மற்றும் தொழில்முறை பாதுகாப்பு மூலம் மருத்துவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், அமைச்சு ஒரு நிரந்தர பொறிமுறையை செயல்படுத்தத் தவறிவிட்டது.

"அரசாங்க சுகாதார அமைப்பில் இருக்கும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்பட்ட சூழலை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்துகிறது", என்றும் அவர் கூறினார். (ஐ)

# இதுவரை 47 பேர் சுட்டு படுகொலை

கொழும்பு, ஓக. 25

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் காகி 47 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு புறநகர் பகுதியான பொரலஸ்கமுவ, மாலனி புலத்சிங்கள மாவத்தையில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக் கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந் துள்ளார்.

25 வயது இளைஞரே இவ்வாறு மரணமானார். முச் சக்கர வண்டியில் பயணித்த இருவர் துப்பாக் கிச் சூட்டை நடத்தியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அர்ஜுன மகேந்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஓக. 25

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 2015 மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை எதிர்வரும் செப்ரெம்பர் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழில் ஒழிப்பு ஆணைக்குழு சமர்ப்பித்த கோரிக்கையை பரிசீலித்த பின்னர் கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க இந்த அழைப்பாணையை அனுப்பியுள்ளார்.

தற்போது சிங்கப்பூரில் வசிக்கும் அர்ஜுன மகேந்திரனுக்கு கடந்த ஆண்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், அந்த அழைப்பாணை முறையாக செயல்படுத்தப்படவில்லை என்று நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, இந்த சந்தேக நபருக்கு ஆங்கிலத்தில் அழைப்பாணை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தைக் கோரியது. இதை ஏற்று இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அர்ஜுன மகேந்திரன்மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம், ஊழில் ஒழிப்பு ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நடத்திய பத்திர ஏலத்தில், பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கும்அதிக மதிப்புள்ள பத்திரங்களை விற்றதன் மூலம் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தினாரெனக் கூறி, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அர்ஜுன மகேந்திரன்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. (ஐ)

# ரணில் கைது நாட்டின் அரசியலை வேறு திசைக்கு மாற்ற முயற்சி!

## சர்வஜன அதிகாரம் கட்சி

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பது இலங்கை அரசியலை வேறு திசையில் கொண்டு செல்வதற்கான முன்னெடுப்பாகும் என சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிறைச்சாலை மருத்துவமனையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எனது அரசியல் கணிப்பின்படி, இது நமது நாட்டின் அரசியலை ஒரு புதிய திசையில் கொண்டு செல்லும் ஒரு சம்பவமாகவே உள்ளது. ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் கொள்கையுடன் நாம் இணங்கவில்லை. என்றாலும், நாட்டின் முன்னாள் ஜனாதிபதியொருவர் இவ்வாறு நடத்தப்படுவது தவறாகும்.

நீதிமன்றத்தின் உத்தரவை நான் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. நீதித்துறை செயல்முறை மற்றும் நடத்தப்பட்ட விசாரணைக்கு வழிவகுக்கும் நிகழ்வுகளின் பிணைப்பு என்பன கேள்விக்கு உரியனவாக உள்ளன என்பதையே நான் குறிப்பிடுகின்றேன்- என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனநாயகம், அரசியல் சுதந்திரம் அடக்குமுறைக்கு உள்ளாகின்றன

## மனித உரிமைகள் பேரவைக்கு எதிர்க்கட்சி கடிதம்

கொழும்பு, ஓக. 25

நாட்டில் ஜனநாயகம் மற்றும் அரசியல் சுதந்திரம் என்பன அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன. அந்த வகையிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருக்கிறார். அரசாங்கத்தின் இவ்வாறான ஜனநாயக விரோத செயல்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவை பணிமனை ஊடாக கடிதம் ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

மேலும், "இலங்கையில் தற்போதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் ஜனநாயகம், அரசியல் சுதந்திரம் என்பன அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன. இவற்றில், முன்னாள் அரச தலைவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு சிறையில டைக்கப்பட்டுள்ளமை அவரின் அரசியல் சுதந்திரத்தை மீறும் செயல்பாடாகும்.

எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வாறான ஜனநாயக விரோத செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை கோருகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான இந்த அநீதிக்கு எதிராக உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும். அவர் தனித்து விடப்பட மாட்டார். நாம் என்றும் அவருடன் நிற்போம் - என்றார். (ஐ)

# நாட்டின் சுற்றுலா மேம்பாட்டுக்காக ஜனாதிபதி பணிக்குழு நியமனம்

கொழும்பு, ஓக. 25

நாட்டின் சுற்றுலா மேம்பாட்டுக்காக 28 பேர் கொண்ட ஜனாதிபதி பணிக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், நாட்டின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஜனாதிபதி பணிக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் இதற்கான வர்த்தமானி வெளியிட்டுள்ளது. இதன்படி, 28 உறுப்பினர்களை கொண்ட ஜனாதிபதி பணிக்குழுவுக்கு வெளி விவகாரவெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# ரயில் மோதி ஒருவர் மரணம்

கொழும்பு, ஓக. 25

ரயில் பாதையில் காவலாளியாக பணியாற்றியவர் ரயில் மோதியதில் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - மதவாச்சியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 34 வயது நபரே உயிரிழந்தார்.

கொழும்பு - கோட்டையில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த ரயிலே அவரை மோதியது. இதில், உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்தவராவார். (ஐ)

# ஒதுக்கப்பட்ட செலவையே ரணில் பயன்படுத்தினார்

## ஐக்கிய தேசிய கட்சி விளக்கம்

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்ச்சைக்குரிய வெளிநாட்டு பயணத்துக்காக செலவிடப்பட்ட பணம் வரவு - செலவு திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட இந்த பயணத்துக்காக செலவிட்ட பணம், ஜனாதிபதியின் செலவுக்காக ஒதுக்கப்பட்ட பணமே, வேறு ஒதுக்கத்தில் அல்லாத பணம் அல்ல. இந்த செலவுகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் கணக்காய்வுகளை மேற்கொண்டது.

இந்த கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும்கூட, அவ்வாறான பிரச்னைகள் குறித்து எந்தவித குறிப்புகளும் இடம்பெறவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

புதையல் தோண்டும் முயற்சி

# பிரதி பொலிஸ் மா அதிபரும் கைது செய்யப்பட வாய்ப்பு!

கொழும்பு, ஓக. 25

அநுராதபுரத்தில் அண்மையில் புதையல் தோண்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் மனைவி கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைக்கமைய அந்தப்பெண்ணின் கணவரான பிரதி பொலிஸ் மாஅதிபரும் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொலைபேசி பதிவுகள் மற்றும் பாதுகாப்பு கமரா காட்சிகளை பகுப்பாய்வு செய்யும் போது தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் கைதான பெண்ணின் கணவரான பிரதி பொலிஸ் மா அதிபர் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புதையல் தோண்டும் முயற் சிகளில் இடம்பெற்ற பகுதியில் ஆலயம் ஒன்றில்இருந்த தனது மனைவியின் செயல்பாடுகள் குறித்து பிரதி பொலிஸ் மாஅதி பரான கணவர் அறிந்திருந்தார் என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக. 25

**கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் கொழும்பு - பொரலஸ்கமுவ - மாலனி புலத்சிங்கள வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முச்சக்கர வண்டியில் வந்த துப்பாக்கிதாரியே துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதில், உயிரிழந்தவர் கல்கிசையைச் சேர்ந்த 25 வயதுடைய கிஹான் துலான் பெரேரா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு எட்டு பேருடன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, முச்சக்கர வண்டியில் வந்த துப்பாக்கிதாரி துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இசை நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில், இரு தரப்பினரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அதிகாரி எவ். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அமைச்சர் ஜெயக்கொடிக்கு எதிராக குற்றப்பத்திரிகை!

கொழும்பு, ஓக. 25

எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிமீது நிதி முறைகேடு தொடர்பான ஊழல் குற்றச்சாட்டில் நடவடிக்கை எடுப்பதற்கான குற்றப்பத்திரிகைகளை ஊழல், இலஞ்சம் ஒழிப்பு ஆணைக்குழு தயாரித்து வருகிறது என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு உரக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய போது ஒரு கேள்விப்பத்திரத்தில் நிதி முறைகேடு செய்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இதன்படி, 80 இலட்சம் ரூபாய் முறைகேடு செய்தார் என்று அமைச்சர் மற்றும் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தை வழங்கிய கேள்விப்பத்திர சபையின் தலைவராக குமார ஜெயக்கொடி பணியாற் றியிருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (ஐ)

# நீதிபதிமீது குற்றப்பத்திரிகை; விசாரிக்க நீதியரசர் நியமனம்!

கொழும்பு, ஓக. 25

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை விசாரிக்க உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதித்துறை சேவை ஆணையகத்தின் தலைவராக பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் மூர்து பெர்னாண்டோவின் பதவிக் காலத்தில் குறித்த சிரேஷ்ட மேல் நீதிமன்ற நீதிபதி மீது 477 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், குற்றம் சுமத்தப்பட்டுள்ள நீதிபதி, தமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சமர்ப்பித்த பதில்களை அடுத்தே அவர்மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நீதியரசர் ஜனக் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# 51 அதிகாரிகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு

கொழும்பு, ஓக. 25

51 பொலிஸ் பரிசோதகர்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

தொடர்புடைய பதவி உயர்வு வழங்கும் ஆவணங்கள் நேற்று பொலிஸ் தலைமையகத்தில் வழங்கப்பட்டன.

2023ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் இவ்வாறு பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளில், பெண் அதிகாரிகள் இருவரும் மூன்று பொலிஸ் சிறப்புப் படையினரும் அடங்குவர்.

தற்போது பணியாற்றும் பொலிஸ் ஆய்வாளர்கள் மற்றும் தலைமை பொலிஸ் ஆய்வாளர்கள் சுமார் 2,000 பேர் இந்த வரையறுக்கப்பட்ட போட்டி தெரிவில் பங்கேற்றனர். இவர்களில், அதிக மதிப்பெண்கள் பெற்ற, சிறந்த சேவையாற்றிய அதிகாரிகள், உதவி பொலிஸ் பரிசோதகர்களாக தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சர் சமரசிங்கமீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 25

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தொடர்பான வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் கல்கிசை நீதிவான் ஏ. டி. சதுரிகா டி சில்வா.

அத்துடன், வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தொடர்பான வழக்கின் சாரங்களை விசாரணை முடிவதற்கு முன்பே சட்டமா அதிபருக்கு அனுப்பியமைக்காக கொழும்பு மோசடி பணியகத்தின் அதிகாரிகளையும் கண்டித்தார்.

தேசிய தொழிலாளர் நிறுவனம் என்று அழைக்கப்படும் அறக்கட்டளைக்கு சொந்தமான ஒரு கட்டடத்தை குத்தகைக்கு எடுத்தமை தொடர்பான வழக்கு விசாரணையிலேயே அதிகாரிகளை நீதிவான் கண்டித்துள்ளார்.

தொழிற்சங்கத் தேசிய தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரிகள் என்று காட்டிக் கொண்டதாகக் கூறப்படும் சமரசிங்க உள்ளிட்டவர்கள் மோசடியாக 36 இலட்சம் ரூபாய்க்கு அந்தக் கட்டடத்தைக் குத்தகைக்கு எடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த ஆவணத்தை சட்டமா அதிபருக்கு அனுப்புவதில் என்ன அவசரம் என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.

மேலும், முழுமையடையாத ஆவணத்தை அனுப்புவது வழக்கின் தாமதத்துக்கு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்று பொலிஸ் துறை நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

இதனிடையே, சம்பந்தப்பட்ட வழக்கில் சமரசிங்க மற்றும் பிறரை சந்தேக நபர்களாகப் பெயரிடுமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர் விடுத்த கோரிக்கை தொடர்பான உத்தரவை, நீதிவான் செப்ரெம்பர் 26 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஓக. 25

சிறுவர் துஷ்பிர யோகத்துக்குஎதிராகவும் சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் பலாங்கொடை பெருந்தோட்ட மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் , மதகுருக்கள், பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், மற்றும் சிவில் அமைப்புகளின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, நாட்டில் சிறுவர் பாதுகாப்புக்காக எவ்விதமான சட்டமும் இதுவரை உறுதியாக்கப்படாத காரணத்தால் பெற்றோர்கள் தொடர்ந்து அச்சத்தில் வாழ்கின்றனர் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும், சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்கூறல், நாட்டின் ஜனாதிபதிக்கும், அரசியல் தலைவர்களுக்கும் உண்டு. சிறுவர்கள் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டியது எமது அரசாங்கத்தின் கடமை என்பதை வலியுறுத்தி குறித்த ஆர்பாட்டத்தை முன்னெடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஓக. 25

மேய்ச்சலுக்கு சென்ற மாடுகளை வீட்டுக்கு அழைத்து வந்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

அநுராதபுரம் - ரத்மலை - உடுல்தெனியவை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஒருவரே உயிரிழந்தார்.

மின்னல் தாக்கியதில் தம் மன்னாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்தார். (ஐ)

# போதைப்பொருள், பணத்துடன் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 25

ராகம பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் போதைப்பொருள் மற்றும் பணத்துடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

8 கிலோ 168 கிராம் ஹெரோயின், 666 கிராம் ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 8 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய், 3 மின்சார ஸ்கூட்டர்கள், ஒரு வான், ஒரு கார், ஒரு முச்சக்கர வண்டி, பல வாகன இலக்கத் தகடுகள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

வேறு ஒருவரின் தூண்டுதலிலேயே இருவரும் இந்தக் கடத்தலில் ஈடுபட்டனர். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதியை கைது செய்யமுன்பு குழு அமைத்து ஆராய்ந்திருக்க வேண்டும்!

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்



கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ஒருவரை கைது செய்யும் முன்னர் அது தொடர்பில் ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாளை அநுரவுக்கு இது போன்று நடந்தாலும் இந்த விடயத்தையே நான் கூறுவேன் என்றும் அவர் கூறினார்.

ரணில் அநுரவா அல்லது வேறு எவருமா என்ற பிரச்னைகள் இங்கு இல்லை. குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நீதித்துறை தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது.

நீதிமன்றங்களை இரவு நேரம் வரை திறந்து வைத்து இவ்வாறான நோக்கத்தை நிறைவேற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் மின்சாரத்தை துண்டித்து, சட்டத்தின் மீதுள்ள நம்பிக்கையை பாழாக்கி, நகைப்பூட்டும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என அரசாங்கத்தை எச்சரிப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்புக்கு நீதி கோரி மக்கள் கையெழுத்து போராட்டம்




கல்முனை, ஒக. 25

"நீதியின் ஓலம்" எனும் தொனிப்பொருளுடனான பொது மக்கள் கையெழுத்து சேகரிக்கும் போராட்டமானது நேற்று முன்தினம் சனிக்கிழமை வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் எட்டு மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


தொடர்பிலும் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

இப்போராட்டமானது தாயகச் செயலணியினரின் ஒருங்கமைப்பில் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது

மேலும் தமிழர்கள் மீது நடந்த, நடந்து கொண்டிருக்கும் அநீதிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையை நோக்கி எமது மக்களின் கோரிக்கைகளை அறிக்கையாக்கி அவர்களின் கையெழுத்துகளுடன் அனுப்புவதற்கான கையெழுத்துப் போராட்டத்தில் அனைவரும் கட்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பால் இணைந்து உங்கள் கையெழுத்துக்களை இட்டு ஐ. நாவை நோக்கிய எமக்கான நீதிப் பயணத்துக்கு வலுச் சேர்க்க அழைக்கிறோம் என ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர். (எ-01)

## சிந்தனைக்கான சிறப்பு சிறுவர் சந்தை




கல்முனை, ஒக. 25

அம்பாறை மாவட்டம் கல்முனை சாஹிபு வீதியில் 15 வருடங்களுக்கு மேலாக வெற்றிகரமாக நடைபெற்று வரும் ஒளிக்கதிர்கள் பாலர் பாடசாலை சிறுவர்களின் வண்ணமயமான சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களின் ஆளுமை விருத்தியில் நேர்மறையான தாக்கங்களை செலுத்தும் முன்வருதல், கணிப்புத் திறன், பங்கேற்றல், தொடர்பாடல், சந்தைப்படுத்தல், ஆக்கத்திறன், தன்னம்பிக்கை, ஒன்றித்து செயல்படுதல் போன்ற பல விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் வகையில் முன்பள்ளி கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு விடயதானமாக இந்த சிறுவர் சந்தை நிகழ்வு நடைபெற்றது.(எ)

## 45 ஆயிரம் ரூபாய் மோசடி 20 வயது இளைஞன் கைது

சம்மாந்துறை, ஒக. 25

ஒன்லைன் மூலம் 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருளை கொள்வனவு செய்து உரிய பணத்தை வழங்காமல் தப்பியோடிய இளைஞனை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புறநகர்பகுதியில் ஒன்லைன் மூலம் கொள்வனவு செய்த பொருளை பெற்றுக் கொண்டு அதற்குரிய பணம் வழங்காது இளைஞன் தப்பி யோடியதாக கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

இதற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. எஸ் ஜெயலத்தின் வழிகாட்டலில் செயல்பட்ட பல்வேறு முறைப்பாட்டு பிரிவு பொறுப்பதிகாரி எம். ஹசீப் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சம்மாந்துறை 01 பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனை கைது செய்தனர்.

இதன்போது கைதான இளைஞ்னிடமிருந்து ஒன்லைன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் மீட்கப்பட் டதுடன் சந்தேக நபர் உள் ளிட்ட சான்றுப்பொருள் வெள்ளிக்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கைக்காக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-01)

## சொந்த வீட்டில் 16 பவுண் தங்க நகைகள் திருட்டு!

*18 வயது இளைஞன், அவரது நண்பன் உட்பட மூவர் கைதாகி விளக்கமறியலில்*

மட்டக்களப்பு, ஒக. 25

மட்டக்களப்பில் சொந்த வீட்டில் 16 பவுண் தங்க நகை களை திருடிய இளைஞனையும் அவரது நண்பனையும் திருட்டு தங்க ஆபரணத்தை வாங்கிய நகை கடை உரிமையாளர் ஒருவர் உட்பட 3 பேரை கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,குறித்த பொலிஸ் பிரிவைச்சேர்ந்த 18 வயது இளைஞனின் தாய், தந்தை இழந்த நிலையில் அவரை அவரது உறவினர்கள் தமது வீட்டில் வைத்து ஆதரித்து படிக்க வைத்து பராமரித்து வந்தனர்.

இந்த நிலையில் தமது வீட்டில் வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் திருட்டுப் போயுள்ளதையடுத்து, பொலிஸ் நிலையத்தில் உறவினர்கள் முறைப்பாடு செய்ததன் பிரகாரம், குறித்த இளைஞன் திருடியதை கண்டறிந்தனர்.

இதனையடுத்து சம்பவ தினமான வெள்ளிக்கிழமை குறித்த இளைஞனையும் அவரது நண்பனையும் மற்றும் திருடிய தங்க ஆபரணத்தை சட்டவிரோதமாக வாங்கிய காத்தான்குடி பகுதியிலுள்ள தங்க ஆபரண விற்பனை நிலைய உரிமையாளர் உட்பட 3 பேரை கைது செய்தனர்.

குறித்த இளைஞன் வீட்டில் அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 16 பவுண்கள் கொண்ட 8 தங்க வளையல்களை திருடி எடுத்துக் கொண்டு சென்று நண்பனுடன் சேர்ந்து அதனை காத்தான்குடி பிரதேசத்திலுள்ள நகைக்கடை ஒன்றில் கொண்டு சென்று விற்று பணத்தை எடுத்துக் கொண்டு அதில் 6 இலட்சம் ரூபாய்க்கு மோட்டார் சைக்கிள் ஒன்றையும், கையடக்க தொலை பேசி ஒன்றையும் வாங்கியதுடன் ஏனைய பணத்தில் ஆடைகள், உணவு வாங்கிய தாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப் பட்ட மூவரையும் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி எதிர் வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மற்றும் பரிசோதனை

கல்முனை, ஒக. 25

அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நேற்று பொலிஸ் நிலைய உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.ஏ.கே. ஹேரத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலன்சிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பொலிஸ் பிரிவு வாகனங்களின் பேரணி ஆரம்பமானது. மேலும் காலை முதல் மாலை வரை பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப்பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகள் என்பவற்றைப் பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.



இந்த நிகழ்வில் அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸாரும் இணைந்திருந்தனர். (எ-01)

# சிறுவர் பாதுகாப்பு வாரம் விழிப்புணர்வு வீதி நாடகம்

மூதூர், ஒக. 25

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி ஊர்வலமும் வீதி நாடகமும் மூதூர் - பாட்டாளிபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

விழிப்புணர்வு ஊர்வலமானது பாட்டாளிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலிருந்து ஆரம்பமாகி எபிநேசர் சிறுவர் அபிவிருத்தி மையம் வரை நடைபெற்றது.

சிறுவர்களுக்கான சிறுவர் நேயம் உள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழல் ஒன்றை கட்டி எழுப்புவோம் எனும்



தொனிப் பொருளின் கீழ் இவ் விழிப்புணர்வு வீதி ஊர்வலம் நடைபெற்றது. இதன்போது ஊர்வலத்தில் சுடுபட்ட சிறுவர்கள் சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

"சட்டவிரோத மதுபாவனையாளர்களும் உற்பத்தியாளர்களினதும் எண்ணிக்கை அதிகரிப்பினால் சமூகத்தை அலங்கோலப்படுத்தாதீர்கள், வரும் எம் சந்ததியினர்கள் எங்கே வாழ்வார்கள், எங்கள் உரிமைகளைப் பறிக்காதீர்கள்"

சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சமூகங்களை சீரழிக்கும் சட்டவிரோத மதுபான உற்பத்தியை உடன் நிறுத்தி, சுதந்திரமாக வாழ வழிகாட்டுங்கள் என வீதிக்கு இறங்கி தங்களுடைய உணர்வுகளை சிறுவர்கள் வெளிப்படுத்தினர்.

ஊர்வலத்தில் சிறுவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மீதான அமெரிக்காவின் வரிவிதிப்புக்கு சீனா கண்டனம்

புதுடில்லி, ஒக. 25

சுதந்திர வர்த்தகத்தின் முழுப் பலன்களையும் அமெரிக்கா அறுவடை செய்து வருவதாகவும் இப்போது வரிகளை மிரட்டும் கருவியாக பயன்படுத்துவதாகவும் இந்தியாவுக்கான சீனத் தூதுவர் சூ பீஹோங் தெரிவித்தார்.

இது குறித்து இந்தியாவுக்கான சீனத் தூதுவர் சூ பீஹோங் மேலும் கூறுகையில்,

"மௌனம், அச்சுறுத்துபவர்களை மேலும் வலிமையாக்குகிறது. சீனா எப்போதும் இந்தியாவுக்கு ஆதரவாக நிற்கும். சீன சந்தையில் அதிகமான இந்தியப் பொருட்கள் வரவேற்கப்படுகின்றன.

மின்னணு உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு கட்டுமானத்தில் சீனா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இந்தியா - சீனா சந்தைகள் ஒன்றிணைந்தால், அது பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும். சீனாவில் மேலும் பல இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சீன நிறுவனங்களுக்கு இந்தியாவும் இதே போன்ற சலுகையை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்"- என்றார். (எ)

# காஸாவில் உணவு பஞ்சம் 5 இலட்சம் பேர் தவிப்பு

ஜெனிவா, ஒக. 25

மேற்கு ஆசியாவிலேயே முதல்முறையாக பலஸ்தீனத்தின் காஸாவில் கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது என ஐ. நா. அறிவித்துள்ளது. சுமார் 5 இலட்சம் பேர் அங்கு உணவு தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளதாக ஐ. நா. அமைப்பின் வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

'காஸாவில் நிலவும் உணவு பஞ்சம் நிச்சயம் தடுக்கக்கூடிய ஒன்றுதான். இஸ்ரேலின் தடை உத்தரவு காரணமாக பலஸ்தீனத்தின் அந்தப் பகுதிக்கு உணவு கொண்ட செல்ல முடியாத சூழல் நிலவுகிறது' என்று ஐ. நா. நிவாரண உதவிப் பிரிவின் தலைமை பொறுப்பில் உள்ள தாமஸ் ப்ளட்ச்சர் தெரிவித்துள்ளார்.

இதை இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், காஸாவில் உணவு பஞ்சம் எதுவும் இல்லை என்று கூறியுள்ளது. காஸாவில் பஞ்சம் என்பது ஹமாஸ் அமைப்பால் பரப்பப்பட்ட பொய்யின் அடிப்படையிலானது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


கடந்த 15ஆம் திகதி நிலவரப்படி காஸா நகரில் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் காஸா முனையின் டெய்ர்-எல்-பலாஹ் மற்றும் கான் யூனிஸ் பகுதியிலும் இந்த நிலை ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

காஸாவில் தினசரி ஐந்தில் ஒரு வீட்டிலும் மூன்றில் ஒரு குழந்தையிடமும் ஒவ்வொரு பத்தாயிரம் பேரில் இருவர் என பசி காரணமாகவும் ஊட்டச் சத்து குறைபாடு காரணமாகவும் உயிரிழந்து வருகின்றனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிகத் தீவிரமாகியது. இதற்கடுத்த இந்த 22 மாதத்தில் மட்டும் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பலஸ்தீனத்தை சேர்ந்த சுமார் 62 இலட்சத்து 192 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பொது மக்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கட்டுமான பணியின்போது பாலம் இடிந்து விபத்து

## சீனாவில் 7 பேர் உயிரிழப்பு



பீஜிங், ஒக. 25

சீனாவில் கட்டுமானப் பணியின்போது பாலம் இடிந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் பலியாகினர்.

மாயமானவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சீனாவின் கியூங்ஹாய் மாகாணத்தில் பாயும் யல்லோ ஆற்றில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கட்டுமானப் பணியின்போது நேற்று முன்தினம் அதிகாலை பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. அப்போது, கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களில் 16 பேர் ஆற்றில் விழுந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்தனர். எஞ்சிய 9 பேர் ஆற்றில் அடித்துச்செல்லப்பட்டு மாயமாகினர். மாயமானவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (எ)

# நிபந்தனைகளை ஏற்காவிட்டால் காஸா முற்றாக அழிக்கப்படும்

## ஹமாஸுக்கு இஸ்ரேல் கடைசி எச்சரிக்கை

டெல்அவிவ், ஒக. 25

**"போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளை ஹமாஸ் ஏற்காவிட்டால் ஹமாஸின் தலைநகரமான காஸா நகரம் முற்றாக அழிக்கப்படும்"- இவ்வாறு இஸ்ரேல் எச்சரித்துள்ளது.இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் காஸாவை ஆளும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே இரண்டாம் கட்ட போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.**

இதில் இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை ஹமாஸ் ஏற்க மறுத்தது. இதையடுத்து காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளை ஹமாஸ் ஏற்காவிட்டால் குறிப்பாக அனைத்து பணயக் கைதிகளையும் விடுவித்து, ஆயுதக்குறைப்புக்கு முன்வராவிட்டால் ஹமாஸின் தலைநகரமான காஸா அழிக்கப்படும்" என்று எச்சரித்துள்ளார்.

காஸா நகரை முற்றுகையிட இஸ்ரேல் இராணுவத்துக்கு அனுமதி வழங்கவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்ததை தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இந்த நிலையில் காஸா நகரை முழுமையாக கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டுள்ளது. மக்களை தெற்கே செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# இம்ரான்கானின் மருமகன் கைது

லாகூர், ஒக. 25

வன்முறை தொடர்பாக இம்ரான்கானின் மருமகன் ஷாஹ்ரேஸ் கானை லாகூர் பொலிஸார் கைது செய்தனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது ஊழல், பணமோசடி உட்பட 150இற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதுதொடர்பான ஒரு வழக்கில் அவரை குற்றவாளி என நீதிமன்றம் உறுதி செய்தது. எனவே ராவல்பிண்டியில் உள்ள சிறையில் அவர் தண்டனை அனுபவித்து வருகிறார். முன்னதாக கடந்த 2023ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி பொலிஸார் அவரை கைது செய்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வன்முறை ஏற்பட்டது.

இந்த வன்முறை தொடர்பாக பஞ்சாப் மாகாணத்தில் வசிக்கும் இம்ரான்கானின் மருமகன் ஷாஹ்ரேஸ் கானை லாகூர் பொலிஸார் கைது செய்தனர். (எ)

# எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் திடீர் வெடிப்பு

## நச்சுப்புகையால் மக்கள் அவதி

வாஷிங்டன், ஒக. 25

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமை திடீரென வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்த வெடிப்பு காரணமாக, ஆலையில் இருந்து கரும்புகை வெளியேறி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெடிப்பைத் தொடர்ந்து வெளியேறும் நச்சுப் புகை காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மூச்சுத்திணறல் மற்றும் சுவாசக் கோளாறுகளை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நச்சுப்புகை அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு வேகமாகப் பரவி வருவதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு உள்ளூர் அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் நச்சுப்புகை பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஆலையை அண்மித்துள்ள பிரதான நெடுஞ்சாலை மற்றும் அருகில் உள்ள பாடசாலைகள் உடனடியாக மூடப்பட்டுள்ளன. (எ)

# படையினரின் தாக்குதலில் 15 பயங்கரவாதிகள் பலி

லாகூர், ஒக. 25

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 15 பயங்கரவாதிகள் பலியாகினர்.

மோதலின்போது பாதுகாப்புப்படையினர் 4 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பைபர் பக்துவா மாகாணம் தெற்கு வாசிர்தான் மாவட்டம் ஆசன் வார்சக் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் பாதுகாப்புப்படையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள், பாதுகாப்புப்படையினர் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடி யாக பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 15 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (எ)

# ஹெலிகொப்டர் வெடித்து 12 பொலிஸார் உயிரிழப்பு

காலி, ஒக. 25

கொலம்பியாவில் இரு வேறு சம்பவங்களில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 17 பேர் பலியாகினர்.

இதில், காலி நகரில் இராணுவத் தளம் அருகே லொறி ஒன்றில் வெடிகுண்டு வெடித்ததில் 5 பேர் பலியாகினர்.

இதற்கு முன்பு பொலிஸ் ஹெலிகொப்டர் ஒன்று நாட்டின் வடக்கே சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதில், 12 பொலிஸார் பலியாகினர். பலர் காயமடைந்தனர். இதனால், மொத்த பலி எண்ணிக்கை 17 ஆக அதிகரித்தது. (எ)

# நைஜீரியா இராணுவம் வான்வழித் தாக்குதல்

நைரோபி, ஒக. 25

நைஜீரியா இராணுவத்தின் வான்வழித் தாக்குதலில் 35 பயங்கரவாதிகள் பலியாகினர்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து காணப்படுகிறது. அவர்களை கட்டுப்படுத்த நைஜீரிய ஜனாதிபதி போலா தினுபு தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், நாட்டின் வடகிழக்கே போர்னோ மாகாணத்தில் போகோஹராம் பயங்கரவாதிகளை இலக்காக கொண்டு அந்த நாட்டின் இராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.


கேமரூன் நாட்டுக்கு அருகே கும்ஷே பகுதியில் 4 இடங்களை இலக்காக கொண்டு இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில், 35 பேர் உயிரிழந்தனர் என நைஜீரிய விமான படையின் செய்தி தொடர்பாளர் எஹிமென் எஜோடேம் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி



மெக்காய், ஓக. 25

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. கெய்ன்ஸ் நகரில் நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி மெக்காய் நகரில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்க அணி 49.1 ஓவர்கள் தாக்குப்பிடித்த நிலையில் 277 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக பிரீட்ஸ்கே 88 ஓட்டங்களும், ஸ்டப்ஸ் 74 ஓட்டங்களும் அடித்தனர். அவுஸ்திரேலியா தரப்பில் அடம் ஸாம்பா 3 விக்கெட்களும், லபுஸ்சேன், சேவியர் பார்ட்லெட் மற்றும் நாதன் எல்லீஸ் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 278 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்க பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. தொடக்க ஆட்டக்காரர்களான ட்ராவிஸ் ஹெட் 6 ஓட்டங்களிலும், மார்ஷ் 18 ஓட்டங்களிலும், லபுஸ்சேன் ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த கிரீன் 35 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஜோஷ் இங்கிலிஸ் தனி ஆளாக போராட அவருக்கு சரியான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அலெக்ஸ் ஹெரி 13 ஓட்டங்களிலும், ஆரோன் ஹார்டி 10 ஓட்டங்களிலும் நடையை கட்டினர். அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு போராடிய ஜோஷ் இங்கிலிஸ் 87 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

வெறும் 37. 4 ஓவர்கள் தாக்குப்பிடித்த அவுஸ்திரேலிய அணி 193 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. தென்னாபிரிக்கா தரப்பில் நிகிடி 5 விக்கெட்களும், பர்கர் மற்றும் செனுரன் முத்துசாமி தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். (எ)

## தோல்வியை சந்தித்த ரொனால்டோ அணி



ரியாத், ஓக. 25

இறுதிப்போட்டியில் ரொனால்டோவின் அணி தோல்வியை சந்தித்தது.

சவுதி சுப்பர் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான அல் நாசர் அணி, அல் ஆலி சவுதி அணியை எதிர்கொண்டது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் இரு அணிகளும் சிறப்பாக விளையாடின. இதனால் ஆட்ட நேர முடிவில் 2-2 என போட்டி சமனில் முடிந்தது தொடர்ந்து பெனால்ட்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் 5-3 என்ற கோல் கணக்கில் அல் ஆலி சவுதி அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது. (எ)

## மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணம் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

டாக்கா, ஓக. 25

மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் களம் காணுகின்றன.

இவை தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குள் நுழையும். தொடக்க ஆட்டத்தில் இந்தியா- இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நிகர் சுல்தானா ஜோட்டி தலைமையிலான இந்த அணியில் 15 வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

பங்களாதேஷ் அணி விவரம் வருமாறு, நிகர் சுல்தானா ஜோட்டி, நஹிதா அக்டர், பர்சானா ஹக், ரூப்யா ஹைதர் ஜெலிக், ஷர்மின் அக்தர் சுப்தா, சோபானா மோஸ்டரி, ரிது மோனி, ஷோர்னா அக்தர், பஹிமா காதுன், ரபேயா கான், மருபா அக்தர், பரிஹா இஸ்லாம் த்ரிஸ்னா, ஷஞ்சிதா அக்தர் மாஹ்லா, நிஷிதா அக்தர், சுமையா அக்தர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)

## 46 வயதில் 5 விக்கெட் வீழ்த்தி இம்ரான் தாஹிர் சாதனை

ஆண்டிகுவா, ஓக. 25

46 வயதில் 5 விக்கெட்கள் வீழ்த்தி இம்ரான் தாஹிர் உலக சாதனை படைத்துள்ளார்.

கரீபியன் பிரீமியர் லீக் ரி - 20 தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 9ஆவது லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்க முன்னாள் வீரர் இம்ரான் தாஹிர் தலைமையிலான கயானா அமேசான் வாரியர்ஸ் அணி, ஆண்டிகுவா மற்றும் பார்புடா பால்கன்ஸை எதிர்கொண்டது.

இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த கயானா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 211 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷாய் ஹோப் 82 ஓட்டங்களும், ஹெட்மெயர் 65 ஓட்டங்களும் அடித்தனர்.

பின்னர் 212 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஆண்டிகுவா அணி இம்ரான் தாஹிரின் சுழற்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சுருண்டது. வெறும் 15. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த ஆண்டிகுவா மற்றும் பார்புடா பால்கன்ஸ் 128 ஓட்டங்களில் சுருண்டது. இதன் மூலம் கயானா அமேசான் வாரியர்ஸ் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஆண்டிகுவா தரப்பில் கரிமா கோர் 31 ஓட்டங்கள் அடித்தார். கயானா தரப்பில் அற்புதமாக பந்துவீசிய இம்ரான் தாஹிர் 4 ஓவர்களில் 21 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

## ஆசிய கிண்ண கிரிக்கெட்: ஆப்கான் அணி அறிவிப்பு

காபூல், ஓக. 25

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

17ஆவது ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) அடுத்த மாதம் (செப்ரெம்பர்) 9ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 'ஏ' பிரிவில் நடப்பு சம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஓமான், ஐக்கிய அரபு அமீரகம், 'பி' பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஹொங்கொங் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்குத் தகுதி பெறும்.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் செப்ரெம்பர் 10ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தையும், 14ஆம் திகதி பாகிஸ்தா னையும், 19ஆம் திகதி ஓமானையும் எதிர்கொள்கிறது.

ஆசிய கிண்ண போட்டிக்கான 15 வீரர்கள் கொண்ட இந்திய அணி சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்தத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு ரஷித் கான் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணி விவரம் வருமாறு, ரஷித் கான், ரஹ்மனுல்லா குர்பாஸ், இப்ராஹிம் ஜட்ரான், டார்விஷ் ரசூலி, செடிகுல்லா அடல், அஸ்மத்துல்லா ஓமர்சாய், கரீம் ஜனத், முகமது நபி, குல்பைதின் நைப், ஷரபுதீன் அஷ்ரப், முகமது இஷாக், முஜீப் உர் ரஹ் மான், அல்லா கசன்பர், நூர் அகமது, பரீத் மாலிக், நவீன் உல் ஹக், பசல் ஹக் பரூக்கி ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (எ)



## "ஆஸி. அணியின் பந்துவீச்சை பார்த்து கற்றுக்கொண்டேன்"




மெக்காய், ஓக. 25

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை பார்த்து கற்றுக்கொண்டேன் என்று தென்னாபிரிக்க வீரர் லுங்கி நிகிடி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் கெய்ன்ஸில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 98 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் மெக்காயில் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி மெக்காய் நகரில் நேற்று நடைபெற்றது.

இந்த நிலையில், அவுஸ்திரேலி யாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்ற பின் ஆட்டநாயகன் விருது வென்ற லுங்கி நிகிடி அளித்த பேட்டியில் கூறியதாவது,

இரண்டாவதாக பந்துவீசுவதில் ஓர் அழகான விஷயம் இருக்கிறது. எந்த மாதிரி பந்துவீசினால் உபயோகமாக இருக்கும் என நாம் உட்கார்ந்து பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

நாதன் எல்லீஸின் திட்டங்களைப் பார்த்தேன். அவர் அதில் மிகவும் வெற்றிகரமாகவே இருந்தார். அதனால், அது எனக்கு சில திட்டங்களை அளித்தது.

சேவியர் பார்ட்லெட் புதிய பந்தில் ஸ்விங்கும் வேகமாக நகர்வதையும் பார்க்க முடிந்தது.

இதிலிருந்து எது உபயோகமாகும் என்ற திட்டம் நமக்கு கிடைக்கிறது. அதை அப்படியே களத்தில் செயல்படுத்த வேண்டிய துதான்- இவ்வாறு நிகிடி கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்புடன்...

ஆகவே, ஜனநாயகத்தையும் அரசமைப்பையும் பாதுகாக்க சகல தரப்பினரும் அரசியல், கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என்று எதிர்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரள, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பியான ரவி கருணாநாயக்க, பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் முன்னாள் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜீ. எல். பீரிஸ், துமிந்த திஸநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், மகிந்த அமரவீர, பவித்ரா வன்னியா ராச்சி, அகில விராஜ் காரியவசம் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

பங்கேற்காத சஜித்

இதேநேரம், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று கூட்டிய சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ பங்கேற்கவில்லை. எனினும், அவர் ரணில் விக்கிரமசிங்க சிகிச்சை பெறும் தேசிய மருத்துவமனையில் நேரில் சென்று அவரின் உடல்நிலை குறித்து விசாரித்தார்.

இதேபோன்று, இந்த சந்திப்பில் கலந்து கொள்வதாக உறுதியளித்த முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும். பங்கேற்கவில்லை. எனினும், சந்திரிகா குமாரதுங்க செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். அதனை தலதா அத்துக்கோரள வாசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜீ.எல்.பீரிஸ்**

இதன்போது கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஜனாதிபதி என்ற வகையில் கிடைத்த அழைப்புக்கு அமைய நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த நிலையிலேயே அது தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அது, தொடர்பான பொலிஸ் விசாரணைகள் முழுமையடையாமல் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்துக்கு எதிராக ஏதேனும் கருத்துகளை வெளியிட்டால் கருத்து வெளியிடுபவர்களை அச்சுறுத்தி மௌனமாக்குவதையே காண்கிறோம். இதனால் ஜனநாயக நிறுவனங்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்படுகின்றது. இங்கு எமது உரிமைகள் முக்கியமானவையே. இதனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

**ரவூப் ஹக்கீம்**

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுகையில்,

நாட்டில் சட்டத்தின் ஆட்சி அமுல் படுத்தப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாறுப்பட்ட கருத்தும் கிடையாது. ஆனால், நடைமுறையில் சட்டத்தின் ஆட்சி முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது. நீதிமன்றத்தின் முடிவை யூ-ரியூப்பர் முன்னதாகவே அறிவிக்கும் நிலைமை இன்று காணப்படுகிறது. இவ்வாறான போக்கு ஜனநாயக விரோதமானது - என்றார்.

ஊடக சந்திப்பில் உரையாற்றிய அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள். அரசாங்கத்தின் சர்வாதிகாரத்துக்கு கட்சி பேதமின்றி அனைவரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்", என்று கூறியிருந்தனர். (ஐ)

## தயவுசெய்து...

முன்னாள் விசேட தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் கோரிக்கை விடுத்துள்ளார். தனது எக்ஸ் தள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

"இலங்கை, தெற்காசியா மற்றும் உலகெங்கிலும் உள்ள பல தலைவர்களுடன் நானும் இணைகிறேன். தயவு செய்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். விளக்கமறியலின்போது அவரின் உடல்நிலை குறித்து நாம் அனைவரும் கவலைப்படுகிறோம்.

2022ஆம் ஆண்டில் நாடு பொருளாதார - அரசியல் குழப்பம் அடைந்த போது இலங்கையைக் காப்பாற்ற எழுந்து நின்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுதியற்றவை. அவை உண்மையாக இருந்தாலும் ஐரோப்பாவில் அவற்றை குற்றமாகவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையையும் கொண்டிருக்காது.

"ஊழலுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் பிரசாரத்திற்கு நான் முழு ஆதரவை வழங்குகிறேன். ஆனால், தயவு செய்து உண்மையான பிரச்னைகளில் கவனம் செலுத்துங்கள்", என்றுள்ளது. (ஐ)

## அரியாலை...

பணிகளில் இரு புதைகுழிகளில் 147 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில், 133 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## வடக்கு...

காணிகளை மக்களுக்கே வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கிறார். அத்துடன், தையிட்டி விகாரை பிரச்னைக்கும் சுமுகமான தீர்வு காணப்படும்.

"ரணில் விக்கிரமசிங்கவை நெருங்க முடியாது - அவர்மீது கை வைக்க முடியாது - அவர் சர்வதேச இராஜந்திரம் தெரிந்தவர் - நரித்தனமானவர் - அவரோடு விளையாட முற்பட வேண்டாம் என எதிரணியினர் கூறி வந்தனர்.

"இந்நிலையில், அவர்மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபகஷக்கள் ஆட்டம் கண்டுள்ளனர். நாட்டுக்கு தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்ஷவா என்பது எமக்கு முக்கியம் அல்ல. எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தனக்குரிய கடமையை செய்யும். ஒரு சில வாரங்களில் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் வசந்தம் பிறக்கும் என நினைக்கிறோம்.

"மக்களுக்கு சொந்தமான அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார். தையிட்டி விகாரைப் பிரச்னையும் தீர்க்கப்படும்.

வடக்குக்கு வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர். அவர்கள் பற்றியும் எமக்கு தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## ரணில்...

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

ரணிலுக்கு நீர்ச்சத்து குறைபாடு இருக்கிறது. அவரின் உடலில் இரத்தத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பிற அறிகுறிகள் காணப்படுகின்றன. நீதிமன்ற அறையில் பல மணி நேரம் காத்திருந்தபோது மின்சாரம் தடைபட்டதாலும் தண்ணீர் குடிக்காததாலும் ஏற்பட்ட சிக்கல்களால் அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டது.

இதனால், அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்து தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மருத்துவ மேற்பார்வையில் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

3 நாட்கள் ஓய்வில் வைத்து நீர்ச்சத்து குறைபாட்டுக்கு சிகிச்சையளிக்க வேண்டும். அது செய்யப்படாவிட்டால், இதயப் பிரச்னைகள், சிறுநீரகப் பிரச்னைகள் மற்றும் பிற சிக்கல்கள் ஏற்படக்கூடும். அதனால்தான் அவர் தற்போது பல சிறப்பு மருத்துவர்கள் குழுவால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறார்.

இரண்டு அல்லது மூன்று நாட்களில் அவர் குணமடைவார் என்று நாங்கள் நம்புகிறோம். அவருக்கு முறையாக சிகிச்சை அளிக்காவிட்டால் சிக்கல்கள் உருவாகக்கூடும் - என்றார்.

இதேவேளை, தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ரணிலின் பாதுகாப்புக்கு 8 சிறை அதிகாரிகள் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், மருத்துவமனையைச் சுற்றி சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சுமந்திரனின்...

எரிப்பு, படுகொலைகள் உட்பட பல சம்பவங்களுக்கு பொறுப்பு கூறவேண்டிய நபர்தான் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டும் உள்ளது. இப்படிபட்ட நபரை பாதுகாக்கும் விதத்தில் கருத்து வெளியிடுவது கவலையளிக்கிறது.

இந்நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். பலம் பொருந்தியவர்களுக்கு எதிராக சட்டம் செயல்படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல எப்படியான நபரும் சட்டத்துக்கு கட்டுப்பட்டே செயல்படவேண்டும். இந்த விடயத்தில் எவருக்கும் விதி விலக்கல்ல.

இந்தியாவில் இருந்துநாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

ஜனாதிபதி அநுர ஆட்சிக்கு வந்து எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஒரு வருடமாகிறது. இதனை முன்னிட்டு முதலாம் திகதியில் இருந்து அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பமாகின்றன. வடக்கில் இருந்துதான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்" - என்றார். (ஐ)

## தபால்...

வந்ததாக தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண் டார தெரிவித்துள்ளார்.

19 கோரிக்கைகளை முன்வைத்து தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்கள் உட்பட பல தொழிற்சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப் பில் ஈடுபட்டன.

இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால், இலட்சக்கணக்கான கடிதங்கள் தேங்கியுள்ளன என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## இராணுவ...

முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தியே பொது அமைப்புகளை ஒன்றிணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமது...

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இராமேஸ்வரம் விசைப்படகு உரிமையாளர் சங்க தலைவரின் தலைமையில் யாழ்ப்பாணம் வரும் தமிழக மீனவர் குழுவில் படகுகளின் உரிமையாளர்கள், இயந்திர திருத்துநர்களும் உள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் அவர்கள் மயிலிட்டி பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை பார்வையிடுவர். (ஐ)

## ஒன்றுசேர்ந்துள்ள...

நடவடிக்கை பழிவாங்கல் அல்ல. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயே அது இடம் பெற்றது.

இதுவரை காலமும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு மாத்திரமே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், எமது ஆட்சியில் யார் எவர் என்ற தராதரம் பாராது, அனைவருக்கும் சமமான வகையில் சட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

தற்போது இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் குப்பைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துள்ளன. ஆனால், அவர்களால் அரசாங்கத்தை ஒன்றும் செய்ய முடியாது. தேர்தலில் நின்று வெற்றி பெறமுடியாதவர்கள், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களே இன்று ஒன்று சேர்ந்துள்ளனர்.

ரணிலின் காலத்திலேயே யாழ்ப்பாண பொது நூலகம் எரியூட்டப்பட்டது, கறுப்பு யூலை கலவரம் நடந்தது. அந்த கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வவுனியா, செட்டிக்குளம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருந்தார்கள்.

அத்துடன் பட்டலந்தை அறிக்கை தொடர்பாக அனைவருக்கும் தெரியும். எனவே, அந்தக் காலப்பகுதியில்தான் இவரை கைது செய்திருக்க வேண்டும். இது சின்ன விடயம்தான். ஆனால், எதிர்காலத்தில் மத்திய வங்கியில் இடம் பெற்ற பிணை முறி ஊழல் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

ஊழல்வாதிகள், அரச பணத்தை மோசடி செய்தவர்கள்மீது தொடர்ச்சியாக சட்டம் பாயும். பொலிஸார் சுதந்திரமான வகையில் தங்களது கடமைகளை செய்வதற்கான சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் அரசு என்றவகையில் பொலிஸாருக்கு எந்த விதமான அழுத்தங்களையும் வழங்கவில்லை - என்றார். (ஐ)

## கூரையிலிருந்து...

இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் கடந்த 12ஆம் திகதி வீட்டின் கூரையை சீர்செய்வதற்காக அவர் மேலே ஏறியுள்ளார். அப்போது, 'சீற்' உடைந்து அவர் கீழே விழுந்து மயக்கமடைந்தார்.

யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்தார்.

இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ரணில் விக்கிரமசிங்க கைதுக்கு இந்தியாவின் சஷி தரூர் கவலை

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு இந்திய தேசிய காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் சஷி தரூர் கவலை வெளியிட்டுள்ளார்.

தமது எக்ஸ் தளத்தில் அவர் இது குறித்து கூறியவை வருமாறு,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறிய குற்றச்சாட்டுகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது. பழிவாங்கும் அரசியலை கைவிட்டு, பல தசாப்தங்களாக நாட்டுக்கு சேவை செய்த முன்னாள் ஜனாதிபதியை உரிய மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்.

எவ்வாறாயினும், இது இலங்கையின் உள்விவகாரம். அதனை நான் முழுமையாக மதிக்கிறேன் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## லசந்த படுகொலை தொடர்பான விசாரணைகள் மீளவும் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 25

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு மேலதிகமாக தற்போது புதுப்பிக்கப்பட்ட விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி இரத்மலானையில் வைத்து லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியல் பழிவாங்கலுக்காகவே ரணில் கைதுசெய்யப்பட்டுள்ளார்

### மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஓக. 25



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது முன்வைக்கப்பட்டுள்ள பட்டலந்த விவகாரம் மற்றும் பிணைமுறி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் நடவடிக் கைகளை மேற்கொண்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணையப் போவதில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை இலக்குப்படுத்தி அரச அதிகாரத்துடன் இடம்பெறும் பழிவாங்கல்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது பட்டலந்த விவகாரம், பிணைமுறி மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கமீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்கள் பலர் இச்சந்தர்ப்பத்தில் இங்குள்ளார்கள். அதுவொன்றும் பிரச்னையில்லை. ஜனாதிபதி பதவி மற்றும் தனிப்பட்ட பயணம் தொடர்பான விவாதம் ஆரம்பித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விரிவாக கலந்துரையாடலாம். குறுகிய அரசியல் பழிவாங்கலை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் முயற்சியில் அரசு

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால



கொழும்பு, ஓக. 25

**ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கான சவப்பெட்டியை தயாரிப்பதற்காக பலகைகள் தயார்படுத்தப்பட்டு வருவதைக் காண முடிவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கொழும்பில் நேற்று நடந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கும் வருத்தம் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

"நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அரசியல் அறிந்தவர்களுக்கு ஒரு கேள்வி எழுந்துள்ளது. ஜனநாயகம் நாட்டு மக்களின் இரத்தத்தில் ஊறிப்போயுள்ளது என்றும், நாட்டில் ஜனநாயகம் 1947ஆம் ஆண்டு முதல் வலுப்பெற்று வந்தது.

எனது ஆட்சிக் காலத்தில் யார் என்ன சொன்னாலும், 19ஆவது அரசமைப்பு திருத்தம் 1947ஆம் ஆண்டுக்குப் பின்னர் , நாட்டில் ஜனநாயகத்தை மிகவும் வலுப்படுத்திய ஓர் அரசமைப்பு என கூற முடியும். தற்போது ஜனநாயக சமூகத்தின் பண்புகள் மங்கி வருவதாகத் தெரிகிறது.

மக்களின் ஜனநாயகம் இவ்வாறு அரிக்கப்பட்டு வந்தால், அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது பேதங்களை மறந்து - பொது மக்களின் சுதந்திரத்துக்காக நாட்டைக் காப்பாற்ற ஒன்றிணைவார்கள். அதேநேரம், ரணில் விக்ரமசிங்கவை விடுவிக்கவும் நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்" - என்றார். (ஐ)

# ரணிலின் பிரிட்டன் பயணத்துக்கு 1.62 கோடி ரூபாய் வழங்கப்பட்டது

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு வழிவகுத்த சர்ச்சைக்குரிய பிரித்தானிய பயணத்துக்கான நிதி, ஜனாதிபதி செயலகத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நடந்த விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தின் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது பிரத்தியேக செயலாளர் உள்ளிட்ட சுமார் 10 பேருடன் லண்டனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதுவோர் உத்தியோகபூர்வ பயணம் அல்லவென, ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு மற்றும் பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் என்பவற்றுக்கு இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் ஊடாக நிரூபணமாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் இரு நாள் பிரித்தானிய பயணத்துக்கான செலவு மதிப்பீட்டுக்கமைய, அங்குள்ள இலங்கை தூதரகத்தால் 44 ஆயிரத்து 445 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் (ஒரு கோடியே 62 இலட்சத்து 70 ஆயிரத்து 572 ரூபாய் 83 சதம்) இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் கோரப்பட்டிருந்தது.

இந்த நிதியானது, ஜனாதிபதியின் செயலகத்துக்கான ஒதுக்கத்திலிருந்து, வெளிவிவகார அமைச்சுக்கு வரவு வைக்கப்பட்டு, அங்கிருந்து பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிதியானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது பாரியார் மைத்ரி விக்கிரமசிங்க மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரின் செலவுகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்களது பயணச்சீட்டு செலவுகளை தவிர்ந்த தங்குமிடம் உள்ளிட்ட ஏனைய அனைத்து செலவுகளுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனைவிட, ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரித்தானியாவுக்கு பயணித்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கடற்படையின் வைத்தியரின் செலவுகளுக்காக மேலதிகமாக 32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இதுதொடர்பில், பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கமைய, கடந்த வருட பிற்பகுதியில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் பலரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த 2023 செப்ரெம்பரில் பிரித்தானியாவுக்கு மேற்கொண்ட பயணம் உத்தியோகபூர்வமற்ற விடயம் என குற்றப்புலனாய்வு திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயத்துக்காக எந்தவித இராஜதந்திர அழைப்புகள் விடுக்கப்படவில்லை. அத்துடன், இராஜதந்திர பயணத்தின்போது வழங்கப்படும் அரச மரியாதைகளும் இந்த பயணத்தின்போது அங்கு உத்தியோகபூர்வ சந்திப்புகள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை.

அதன்படி, இது ஒரு தனிப்பட்ட பயணம் என விசாரணைகளில் தெரியவந்திருந்த நிலையில், அதற்காக அரசின் நிதி பயன்படுத்தப்பட்டமையும் கண்டறியப்பட்டது.

அதற்கமையவே, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1993 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்து சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## ரணிலும் எதிரணியினரும் ஒரே கொள்கை உடையோர்

### மக்கள் போராட்ட அமைப்பு

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதையடுத்து சகல எதிரணி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் அவர்கள் அனைவரும் ஒரே கொள்கை உடையவர்கள் நண்பர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு காட்டியுள்ளனர் என ஜன அறகல சங்விதானவின் (மக்கள் போராட்ட அமைப்பு) நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட முன்னணி நேற்று கண்டியில் நடத்திய போராட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவை சரியாகவும் பிழையாகவும் விமர்சித்தவர்கள் எல்லலோரும் அவருடன் இணைந்தமையை காண முடிந்தது. இதன்மூலம் அவர்கள் அனைவரும் ஒத்த தன்மையுடையவர்கள் - நண்பர்கள் என்பதையே காட்டினர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்ததில் தவறு இல்லை. அது எடுக்க வேண்டிய விடயம். ஆனால், ஒரு சாதாரண விடயத்துக்காகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட பல விடயங்கள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்காதமை, மத்திய வங்கி நிதி மோசடி வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் என்று எல்லாம் அரசியல் அரங்கில் பேசப்பட்டன. இவை மனைவியுடன் வெளிநாடு சென்றார் என்று கூறப்படும் விடயத்தை விட பாரதூரமான விடயங்களாகும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org